யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

இடர் விடுமுறைக்கால சுயகற்றலுக்கான செயலட்டை (2) – 2020

தரம் - 10 | தமிழ் இலக்கிய நயம்

பெயர் / சுட்டெண் : ..... திரு.பா.ஜெகசீலன் B.A, PGDE

அறிவுறுத்தல்கள் :

- கேட்கப்பட்ட அனைத்து வினாக்களிற்கும் பதிலளிக்குக.
- வினாக்களுக்கான விடைகள் விடைத்தாள் ஒன்றில் எழுதப்பட வேண்டும்.
- அனைத்து வினாக்களும் உரிய பாட அலகுகளை நன்கு கற்று விளங்கி பதிலளிக்க முயலுங்கள்.
- பாடசாலை தொடங்கும் போது விடைத்தாள்களை கோவையில் இட்டு வகுப்பாசிரியரிடம் ஒப்படைக்க வேண்டும்.

குறிப்பு: எல்லா வினாக்களிற்கும் விடை தருக.

பகுதி I பகுதி IIற்கு சுருக்கமான விடை தருக.

பகுதி III ற்கு கட்டுரையமைப்பில் விடை தருக.

பகுதி - I

1) அ) தாய்ப்பசு என்ற சிறுகதையின் ஆசிரியர் யார்?
   ஆ) இவ் ஆசிரியர் படைத்த நாவல்களையும் அதற்குக் கிடைத்த விருதினையும் குறிப்பிடுக?

2) 'ஒரு நாளைக்கு இதுவே ஒரு படி பாலைக் குடிச்சிடும் போலே இருக்கு'
   அ) யாரால்?
   ஆ) யாருக்கு கூறப்பட்டது?

3) 'நன்றி கொன்று அரு நட்போடு நார் அறுத்து
   ஒன்றும் மெய்மை சிதைத்து உரை பொய்த்துள்ளார்'
   அ) உரை பொய்த்துள்ளார் என்று குறிப்பிடப்படுபவர் யார்?
   ஆ) அவர் செய்ய குற்றங்கள் எவை என்று குறிப்பிடப்படுகின்றது?

4) 'சீர்மையின் தீர்ந்தனன் அறம் மறந்தனன்
   அன்புகிடக்க நம் மறன் அறிந்திலன்''
   அ) அறம் மறந்தவன் யார்?
   ஆ) சீர்மையின் தீர்ந்தனன் என்ற அடியில் சீர்மை எனச் சுட்டப்படுவது யாது?

www.ikedu.lk

5) ‘தாமரை வதனம் சாய்த்து தனு நெடுந்தரையின் ஊன்றி
மாமியார் குழுவில் வந்தானாம் என் மைந்தன் நிற்ப’
அ) மாமியார்கள் சூழ்ந்த கூட்டத்தில் வந்த மருமகன் எனச் சிறப்பிக்கப்படுபவன் யார்?
ஆ) இப்பாடலடியில் இடம் பெறும் அணிகளை விளக்குக?

6) ‘நங்கையைக் கண்ட வள்ளல் நயனங்கள் பணிப்ப நின்றான்!
அ) நங்கை எனக் குறிப்பிடப்படுபவர் யார்?
ஆ) நயனங்கள் பணிந்து நின்ற வள்ளல் யார்? அவ்வாறு நின்றமைக்குரிய காரணம் யாது?

7) சீ! நீ என்ன மனிதரைப் போல கேவலமாய் நடந்து கொள்ளுகிறாய்”
அ) யாரால்
ஆ) யாருக்கு கூறப் பெற்றது.

8) அ) உரிமையும் கடமையும் என்ற கட்டுரையின் ஆசிரியர் யார்?
ஆ) அன்பின் வழியது உயர்நிலை என்ற குறட்பாவை எழுதுக?

9) “மொண்டு நீரை முகத்தருகு ஏந்தினாள்
கெண்டை கெண்டையெனக் கரையேறினாள்”
அ) இவ்வடிகளில் இடம்பெற்ற அணியினை விளக்குக?
ஆ) மொண்டு என்பதன் பொருள் யாது?

10) “மலரம்பு ஐந்தையும் வைத்து வணங்கினான்”
அ) மலரம்பு ஐந்தையும் வைத்து வணங்கியவன் யார்?
ஆ) மலரம்பு ஐந்தும் யாவை?

www.ikedu.lk

பகுதி - II

கீழுள்ள பாடற் பகுதியினை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(2) "நன்றி கொன்று அருநட்போடு நார் அறுத்து
ஒன்றும் மெய்மை சிதைத்து உணர பொய்த்துள்ளார்
கொன்று நீக்குதல் குற்றத்தின் நீங்குமால்
சென்று மற்று அவன் சிந்தையைத் தேர்கு வாய்.

வானரங்கள் வெருவி மலை ஒரீஇ
கான் ஒருங்குபடர் அக்கார் வரை
மீன் நெருங்கிய வானகம் மீன் எலாம்
போனபின் பொலிவற்றது போன்றதே

1. இப்பாடலில் இடம் பெறும் பாத்திரங்கள் யாவை?
2. "கொன்று நீக்குதல் குற்றத்தின் நீங்குமால்" என்பதன் மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?
3. இப்பாடலில் இடம்பெறும் உவமையணி ஒன்று விளங்குக?
4. "சென்று மற்று அவன் சிந்தையைத் தேர்குவாய்"
   யாரால் யாருக்கு கூறப்பட்டது?
   இங்கு அவன் என்பவன் யார்?
5. அருநட்போடு நார் அறுத்து இதில் நார் என்பது எதனைச் சுட்டுகின்றது.

(3) கீழுள்ள உரைப்பகுதியை வாசித்து தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக?

உரிமைக்கும் கடமைக்கும் இடையே உள்ள ஏற்றத்தாழ்வை நீக்குவதற்கு இயற்கை அமைத்த ஓர் அருமையான பாதுகாப்பே அன்பு எனப்படுவது. அன்பு எங்கே உயர்ந்து விளங்குகின்றதோ அங்கே உரிமைப் போராட்டம் இல்லை. கடமைக் குறைவு இல்லை. அதனால் 'அன்பின் வழியது உயிர்நிலை' என்கிறார் திருவள்ளுவர். அன்பு இல்லாத வாழ்க்கை பாலை நிலத்தில் உள்ள பட்ட மரம் போன்றது என்றும் கூறுகிறார். அதனால் குடும்பத்தில் அன்பு ஆட்சி செய்ய வேண்டும் என்று முன்னோர்கள் ஏற்படுத்தினார்கள். இல்வாழ்க்கையை ஓர் அறம் என்று சிறப்பித்து இல்லறம் என்றார்கள். மக்கட்பேறு, சுற்றம் தழுவுதல் முதலியவற்றை அதன் அங்கம் ஆக்கினார்கள். தேசபக்தி என்று அமைந்த அன்பு அப்படியே நாடு என்ற பெரிய குடும்பத்தைப் போற்றி வளர்ப்பதற்கு ஏற்பட்டதாகும். சமயம் அல்லது கடவுள் நெறி என்பதும் உலகத்தில் வாழும் எல்லோரிடமும் அன்பு செலுத்தி உலகத்தையே கடவுளின் குடும்பம் என்று கருதும் பரந்த நோக்கத்தை வளர்ப்பதற்கு ஏற்பட்டதாகும்.

ஆனால் குடும்பத்தில் தாய் செலுத்தும் அன்பைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு தந்தையோ, மக்களோ தன்னலம் உடையவர்களாய்த் தீமை செய்வார்களானால் என்ன ஆகும்? அப்படித்தான் நாட்டில் ஒரு சாரரின் அன்பைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு மற்றொரு சாரார் தன்னலமாக வாழ்வார்களானால் அன்பு வரண்டு போகும்.

உரிமைக்கும் கடமைக்கும் போராட்டம் ஏற்படும்.

www.ikedu.lk

1) அன்பு உயிர்வழி எனக் குறிப்பிடுவதன் காரணம் யாது?
2) அன்பைக் கடைப்பிடிப்பதற்கு காணப்படும் அறவழிகள் எவை எனக் கூறப்படுகின்றது.
3) உரிமைக்கும் கடமைக்கும் எவ்வாறு போராட்டம் ஏற்படுகிறது?
4) அன்பின் முக்கியத்துவம் பற்றி பந்தியில் இருந்து எடுத்துக் காட்டுக.
5) இல்லறத்தின் அங்கங்கள் யாவை?

பகுதி - III

(4) தாய்ப்பசு என்றும் கதையில்
   1) பசுவின் தாய்மை உணர்வு
   2) மனிதனின் சுயநலம்
   3) ஜீவ காருண்யத்தின் தேவை விளக்குக.

(5) கிஷ்கிந்தா படலத்தில்
   1) இராமபிரானின் சீற்றம் வெளிப்படும் விதம்
   2) மதிநுட்பத்தில் சிறந்தவள் தாரை
   3) தாரையின் கைம்மைக் கோலமே இலக்குமணனின் சீற்றத்தைக் குறைத்தது – விளக்குக.

(6) விவேக சிந்தாமணிப் பாடத்தில் தலைவியின் எழில்நலன் வெளிப்படுத்தப்படுவதனையும், கவிஞர்களின் கவி ஆற்றலையும் விளக்குக?

(7) உரிமையும் கடமையும் என்ற கட்டுரையினைக் கொண்டு
   1) உரிமை, கடமை, அன்பு இவற்றுக்கிடையிலான தொடர்பினை விளக்குக?
   2) உரிமையும் கடமையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் என்பதனை விளக்க ஆசிரியர் கையாண்ட நுட்பங்களை விளக்குக?
   3) உரிமையும் கடமையும் என்ற கட்டுரையில் ஆசிரியர் தான் கூறவிழைந்த கருத்துக்களை முன் வைக்க கையாண்ட உத்திகளை விளக்குக?

www.lkedu.lk